எம்.சி.ஓ.பி. எண் : 4076/2019 தேதி 24.06.2026

நீ.ம.சா. : 1

பெயர் : சத்தியநாராயணன்

த.பெ : மகாலிங்கம்

வயது : 39

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வழங்கப்பட்ட அழைப்பாணை நகல் தாக்கல் செய்கிறேன் அதுX.1. நான் சிட்டியூனின் வங்கியின் எச்.ஆர் பிரிவின் டெபுட்டி மேனேஜராக பணிசெய்கிறேன். அதுX.2. அழைப்பாணையில் கேட்டுள்ளவாறு எங்கள் வங்கியில் பணி செய்யும் திருமதி. பிரியா என்பவரின் 20.10.2018 முதல் 20.4.2019 வரை விபத்துக்கு முந்தைய 6 மாத காலத்திற்குறிய வருகைப்பதிவேடு விவரங்களும், அவர் விபத்துக்கு பிறகு பணியில் சேர்ந்த பின் 18.6.2020 முதல் 18.12.2020 வரை உள்ள நாட்களுக்குரிய எங்கள் அலுவலக வருகை பதிவேடு விவரங்களை சான்றளித்து தாக்கல் செய்கிறேன். அதுX.3. மேற்படி நபர் எங்கள் வங்கியில் எடுத்த எல்லா விடுப்பு விவரங்களும் அடங்கிய ஆவணங்களை சான்றளித்து தாக்கல் செய்கிறேன். அதுX.4. மேற்படி நபரின் பே சிலிப் அக்டோபர் 2018 முதல் நவம்பர் 2020 வரை சான்றளித்து தாக்கல்செய்கிறேன். அதுX.5. அவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்பட்டதற்கான விவரங்களை சான்றளித்து தாக்கல் செய்கிறேன். அதுX.6. அவருடைய வருமான வரி ரிட்டன் அசஸ்மன்ட் இயர் 2018-19 முதல் 2024-2025 வரை தாக்கல் செய்கிறேன். அதுX.7. அவருக்கு 16.6.2020 அன்று அவருடைய பணி தொடர்பாக வழங்கப்பட்ட அலுவலக உத்தரவு நகலை தாக்கல் செய்கிறேன். மேலும் 30.3.2026 அன்று அவருக்கு வழங்கப்பட்ட பணி சம்மந்தமாக அலுவலக உத்தரவு நகலை தாக்கல் செய்கிறேன். அதுX.8. அவருக்கு எங்கள் அலுவலகத்தில் 2020-2021 முதல் 2025-2026 வரை வழங்கப்பட்ட பர்பாமன்ஸ் அப்ரைசல் ரிப்போர் சான்றளித்து தாக்கல் செய்கிறேன்.அதுX.9. விபத்துக்கு பிறகு மேற்படி நபர் பணியில் சேர்ந்த பின் தொடர்ச்சியாக பணிக்கு வருகிறார். விபத்துக்கு பிறகு அவர் பணிக்கு வராத நாட்களுக்கும் அவருக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு எந்த நேரத்திலும் சம்பள இழப்பு ஏற்படவில்லை. X.5.ன்படி அவருடைய சம்பளம் தொடர்ச்சியாக அதிகரித்து வந்தது.X.6.படி அவருக்கு X.9.ல் குறிப்பிட்டுள்ள ரேங்கிங் வழங்கப்பட்டுள்ளது. 2019 பிறகு 2020-2021 இன்கிரிமெண்ட் வழங்கப்பட்டுள்ளது. எங்கள் வங்கியில் கூடவாஞ்சேரி கிளையில் முதலில் வேலை செய்தார். தற்போது கும்பகோணம் கிளையில் வேலை செய்கிறார். அவர் கூடுவாஞ்சேரி கிளையிலிருந்து பணிமாறுதல் செய்யப்பட்ட பிறகு டெப்டி மேனேஜராக இருந்தார். தற்போதும் அவர் அதே தகுதியில்தான் வேலை செய்கிறார். அவர் கும்பகோணம் கிளையில் சேர்ந்த பிறகு அவரின் டிஸ்எபிலிட்டியை அளவு செய்ய யாராவது அலுவலரை நியமனம் செய்தோமா என்றால் இல்லை. அவர் வேலைசெய்ய எந்த தகுதி இழப்பும் ஏற்படவில்லை.X.9.ல் குறிப்பிட்டுள்ள ரேட்டிங் சம்மந்தமாக அவருக்கு சமமான

தகுதியில் உள்ள ஒரு அலுவலரின் ரேட்டிங்கை ஒப்பீடு செய்தால் அதை பற்றி சரியாக சொல்ல முடியும் என்றால் சரி.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். X.6.ன்படி அவருக்கு 2022, 2023, 2024 ஆகிய ஆண்டுகளில் இன்கிரிமெண்ட் வழங்கப்படவில்லை என்றால் சரி. தற்போது அவருக்கு லேசான பணி வழங்கப்பட்டுள்ளது. விபத்துக்கு பிறகு இன்றுவரை X.9.ன் படி அவருடைய ரேங்கிங் லோயஸ்ட் ரேட்டிங் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி. அதனால் அவருக்கு சமமாக உள்ளவர் வாங்கும் சம்பளத்தை விட குறைவா கிடைக்கும். எங்கள் வங்கியில் ஒரு டெப்டி மேனேஜர் சாதாரணமாக சிடிசி அடிப்படையில் மாத சம்பளம் 1.50 லட்சம் முதல் 3 லட்சம் வரை மொத்த சம்பளம் பெருவார். தற்போது அவர் ரூ.1,42,543/- மாத சம்பளமாக பெறுகிறார். அவருக்கு லோயஸ்ட் ரேட்டிங் கொடுக்கப்பட்டதால் பணி உயர்வு, சம்பள உயர்வு பாதிக்கப்பட்டுள்ளது. X.9 ரேட்டிங் என்பது அவருடைய பர்பாமெண்ஸ் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

x

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.